# இலங்கையில் ஒல்லாந்தர்கால கல்வி நிலை – ஓர் வரலாற்று ஆய்வு

**R. Thakshaayini**

*Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka*
thakshaa8184@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

ஒல்லாந்த ஆட்சியாளர் தமது மதப்பிரசார நடவடிக்கைகளையும் புரட்டஸ்தாந்து மதத்தின் குறிக்கோள்களையும் இலங்கை மக்கள் மத்தியில் பெரிதும் வலுப்படுத்திக் கொள்வதற்கு உபயோகித்த பிரதான கருவி கல்வியாகும். இலங்கை நாட்டில் ஓர் ஒருங்கிணைக்கப்பட்ட கல்வியமைப்பை உருவாக்குவதற்கு முயன்றவர்கள் என்ற வகையில், இலங்கையின் கல்வி வரலாற்றில் ஒல்லாந்தர் காலம் முக்கியமானதாவுள்ளது. கல்வியே சமயத்தின் கைப்பாவையாகியதால் இவர்களால் கல்வியில் செலுத்தப்பட்ட கவனம் தம் மதத்தையும் ஆதிக்கத்தையும் பரப்புவதற்கு மேறகொள்ளப்பட்ட முயற்சிகளாகவே அமைந்தன. இலங்கை மக்களின் வாழ்க்கை மற்றும் அவர்களது சமூக நலன்கள் ஆகியவற்றில் ஒல்லாந்தர் மிகக்கூடிய அக்கறை கொண்டிருந்தமையால் ஒல்லாந்தர் காலக்கல்வி முறையும் கல்வி முயற்சிகளும் அவற்றோடு இணைந்த நிறுவனங்களும் மக்களின் வாழ்க்கை நலன்களும் ஒன்றோடு மற்றொன்று பின்னிப்பிணைந்ததாகவிருந்தமை தவிர்க்க முடியாததாயிற்று என்பதனை எடுத்தியம்புவதாகவே இவ்வாய்வு அமைகின்றது.

**Key words:** மதப்பிரசாரம், புரட்டஸ்தாந்து, ஆட்சியாளர்

## 1.1 அறிமுகம்

ஒல்லாந்த ஆட்சியாளர் தமது மதப்பிரசார நடவடிக்கைகளையும் புரட்டஸ்தாந்து மதத்தின் குறிக்கோள்களையும் இலங்கை மக்கள் மத்தியில் பெரிதும் வலுப்படுத்திக் கொள்வதற்கு உபயோகித்த பிரதான கருவி கல்வியாகும். இலங்கை நாட்டில் ஓர் ஒருங்கிணைக்கப்பட்ட கல்வியமைப்பை உருவாக்குவதற்கு முயன்றவர்கள் என்ற வகையில், இலங்கையின் கல்வி வரலாற்றில் ஒல்லாந்தர் காலம் முக்கியமானதாவுள்ளது. கல்வியே சமயத்தின் கைப்பாவையாகியதால் இவர்களால் கல்வியில் செலுத்தப்பட்ட கவனம் தம் மதத்தையும் ஆதிக்கத்தையும் பரப்புவதற்கு மேறகொள்ளப்பட்ட முயற்சிகளாகவே அமைந்தன. இலங்கை மக்களின் வாழ்க்கை மற்றும் அவர்களது சமூக நலன்கள் ஆகியவற்றில் ஒல்லாந்தர் மிகக்கூடிய அக்கறை கொண்டிருந்தமையால் ஒல்லாந்தர் காலக்கல்வி முறையும் கல்வி முயற்சிகளும் அவற்றோடு இணைந்த நிறுவனங்களும் மக்களின் வாழ்க்கை நலன்களும் ஒன்றோடு மற்றொன்று பின்னிப்பிணைந்ததாகவிருந்தமை தவிர்க்க முடியாததாயிற்று.

சிங்கள அரசர்களின் காலத்தில் பிரிவேணைப் பாடசாலைகளும் பௌத்த கோயில்களும் மிகவும் நெருக்கமாக இணைந்திருந்தமையைப் போன்றே தேவாலயமும் பாடசாலையும் வேறல்ல எனக்கூறத்தக்க வகையில் மிகவும் நெருக்கமாக இணைந்திருந்தமை ஒல்லாந்தர் கால நிர்வாகத்தின் ஒரு முக்கிய அம்சமாக அமைந்திருந்தது. அநேகமாக ஒவ்வொரு பாடசாலையும் ஒல்லாந்தைச் சேர்ந்த மதகுரு ஒருவரின் நேரடியான மேற்பார்வையில் இயங்கியது.

## 1.2 ஆய்வு நோக்கங்கள்

- ஒல்லாந்தர் காலக் கல்விமுறையின் உள்நோக்கங்களை இனங்காணல்.
- இக்காலத்தில் வழங்கப்பட்ட கல்வியின் சிறப்பம்சங்களை இனங்காணல்.
- கல்வியில் மதப்பிரச்சாரத்திற்கு வழங்கப்பட்ட முக்கியத்துவத்தை அறிதல்.



ISBN 978-955-627-120-1

### 1.3 ஆய்வு முறையியல்

இவ் ஆய்வு ஓர் வரலாற்றியல் ஆய்வாக உள்ளது. வரலாற்று விடயங்களை எடுத்தியம்புவதற்காக சமகால மூலங்களில் இருந்து ஒல்லாந்தர் கால கல்வி தொடர்பான தகவல்கள் பெறப்பட்டு பகுப்பாய்வு இடம்பெற்றுள்ளது.

### 1.4 தரவுப் பகுப்பாய்வு

#### 1.4.1 பாடசாலை நடைமுறைகள்

இலங்கைத் தீவிலுள்ள எல்லாப்பாடசாலைகளும் ஆண்டு முழுவதும் தொடர்ந்து நடைபெற்று வந்தன. திட்டவட்டமான தவணைகளோ, நீண்ட விடுமுறைகளோ இருக்கவில்லை. நத்தார் தினம், புத்தாண்டுத் தினம், சுவர்க்க ஆரோகணத் திருநாள், பிரார்த்தனை செய்வதற்கும், நன்றிக்கடன் செலுத்துவதற்கும் என விசேடமாக ஒதுக்கப்படும் நாட்கள் ஆகிய இவை மட்டுமே விடுமுறை நாட்களாக அனுஷ்டிக்கப்பட்டன. ஞாயிற்றுக்கிமை தவிர்ந்த மற்ற எல்லா நாட்களும் பாடசாலை நாட்களாயிருந்தன. புதன் கிழமைகளும், சனிக் கிழமைகளும் அரைநாட்களாக இருந்தன. ஒல்லாந்தர் இலங்கையில் தமது ஆட்சியை நிலை நிறுத்தியதும் தம் பாடசாலைகளை நிறுவ ஆரம்பித்தனர். கி.பி 1650 ஆம் ஆண்டளவில் அவர்களின் பாடசாலைகள் இயங்க ஆரம்பித்தன. மதபோதகர்கள் நியமிக்கப்பட்டனர். அவர்கள் நகர மக்களுக்கு மட்டுமல்லாது சிங்கள மற்றும் தமிழ் (மலபார்) இனத்தையும் சேர்ந்த வயது வந்தோருக்கும் மொழி பெயர்ப்பாளர் மூலம் கோவிற்பற்று பாடசாலைகளில் கல்வி போதித்தனர்.

#### 1.4.2 யாழ்ப்பாண செமினரியில் கல்வி:

ஒல்லாந்தர் யாழ்பாணத்தைக் கைப்பற்றிய போது 20 உரோமன் கத்தோலிக்க தேவாலயங்கள் இருந்தமையும், அவற்றுள் சில சிறந்த கட்டிடங்களை உடையனவாய் இருந்ததையும் கண்டு அவற்றை தமது உடைமையாக்கிக் கொண்டனர். ஒல்லாந்த, போத்துக்கேய தேவாலயங்களை விட 34 இந்துக் கோயில்களும் அங்கே இருந்தன. வலிகாமம் (பெலிகமோ) மாகாணத்திலுள்ள தெல்லிப்பளை தேவாலயத்தில் 1658 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் வணக்கத்திற்குரிய பிலிப் போல்டயஸ் மேற்கொண்ட ஆரம்பகால முயற்சிகளின் பயனாக சீர்திருத்திய கிறிஸ்தவ மதப் பரப்பிலும், கல்வியிலும் இம்மாகாணம் பெருமுன்னேற்றத்தைக் கண்டது. கி.பி. 1736 ஆம் ஆண்டளவில் யாழ்பாணத்திலுள்ள பாடசாலைகளில் 35963 கிறிஸ்தவ மாணவர்கள் கல்வி கற்றனர்.

கிழக்கிந்தியத் தீவுகளில் ''செமினரி'' ஒன்றை அமைப்பது பற்றி கி.பி.1638 ஆம் ஆண்டிலிருந்தே தேவாலயச் சபை திட்டமிட்டு வந்தது. எனினும் இலங்கையில் ஒல்லாந்தர் தமதாட்சியை நிலை நிறுத்திக் கொள்ளும்வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கி.பி.1687 ஆம் ஆண்டிற் கிழக்கிந்தியக் கம்பனியின் ஆளுனருக்கு மீண்டும் வேண்டுகோள் ஒன்று விடுக்கப்பட்டது. கொழும்பிலும், யாழ்பாணத்திலுமாக இரு செமினரிகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என இச்சபை முடிவு செய்தது. ஆனால் உடனடியாக எந்தவித முடிவும் எடுக்கப்படவில்லை. கி.பி.1690 ஆம் ஆண்டில்தான் முதலாவது செமினரி யாழ்பாணத்திலுள்ள நல்லூரில் 24 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. மதகுருக்களாகவும், உபதேசியர்களாகவும், எழுதுவினைஞர்களாகவும், மொழிபெயர்ப்பாளர்களாகவும், ஆசிரியர்களாகவும் தமிழ் இளைஞர்களைப் பயிற்றுவதே இச்செமினரியின் நோக்கமாகவிருந்தது. இச்செமினரிக்கு அதிபர் அல்லது முதல்வர் ஒருவர் பொறுப்பாகவிருந்தார். ஓர் ஒல்லாந்தரும் தமிழில் கல்வி புகட்டக்கூடிய உள்ளூர்வாசிகள் இருவரும் அவருக்கு உதவியாளராக நியமிக்கப்பட்டனர். மதகுருமார், 'ஸ்கொலார்ச் சென்', அதிபர் ஆகியோரின் முன்னிலையில் மாணவர்கள் ஆண்டிற்கு இருதடவை பரீட்சிக்கப்பட்டனர்.

இச் செமினரி பற்றி ஆரம்பத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள் திருப்திமரமாகவிருந்தன. மாணவர்களின் முன்னேற்றம் மெச்சத்தக்கதாயிருந்தது. ஆனால் துரதிஷ்டவசமாக இவ்வபிவிருத்தி தொடர்ந்து நீடிக்கவில்லை. இச்செமினரி மீது வைத்திருந்த நம்பிக்கை வீணாயிற்று. அதிபர் பதவியை நிரப்புவதற்குத் தகுதியான ஒருவர்



ISBN 978-955-627-120-1

கிடைக்காமையினால் இச்செமினரியின் அதிபர் பதவி நீண்ட காலத்திற்கு காலியாகவே வைக்கப்பட்டிருந்தது. செமினரியில் வசித்த ஒல்லாந்த ஆசிரியரிடமே அதை மேற்பார்வை செய்யும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. இதன் விளைவாக அதன் கல்வித்தரமும் ஒழுங்கும் சீர்குலைய ஆரம்பித்தன. மாணவரில் பெரும்பாலானோர் தமது இதயத்தில் புறச்சமயப் பற்றுள்ளவர்களாகவே இருந்தனர். அச்செமினரியின் தரத்தை உயர்த்துவதற்கும் பாடசாலைக்குப் புத்துயிர் அளிப்பதற்கும் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தோல்வியுற்றதும், கி.பி 1723 ஆம் ஆண்டில் அது மூடப்பட்டது.

பாடசாலைக் கல்வியமைப்பு முறையின் திறனும், வெற்றியும், ஆசிரியர்களின் பணியிலே பெருமளவு தங்கியிருந்தன. ஒல்லாந்தரின் நிருவாகத்தில் கோவில்பற்றுக்களில் உள்ள சுயமொழிப் பாடசாலைகளில் கற்பித்த ஆசிரியர்கள் பெருமதிப்பைப் பெற்று வந்தனர். பரிசோதகரின் விதப்புரையின் பேரில் தேசாதிபதியால் அல்லது மாகாணத் துணை முதல்வரால் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். கோயிற்பற்று பாடசாலையின் தலைமையாசிரியர், பாடசாலைத் தோம்புகள் அல்லது வட்டாரப் பதிவுப் புத்தகங்களுக்குப் பொறப்பாக இருந்தார். பாடசாலைத் தோம்புகள் கோயிற்பற்றுக்களிலுள்ள கிறீஸ்தவர்கள் பற்றிய தகவல்கள், அவர்களின் பெயர்கள், வயது, ஞானஸ்தானம் பெற்ற திகதி, பாடசாலையில் சேர்ந்த திகதி, பாடசாலையை விட்டு விலகிய திகதி முதலியவற்றைக் கொண்டிருந்தன.

கோவில்பற்று பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட சம்பளங்களில் எந்தவிதமான ஒழுங்குமுறையையும் காண முடியவில்லை. பாடசாலைக்குப் பாடசாலை சம்பள வேறுபாடு காணப்பட்டிருந்தது. கோவிற்பற்றுப் பாடசாலைகளில் கல்வி நிருவாகத்தை மேற்கொண்டிருந்த தலைமையாசிரியர்களின் நிலை அதே பாடசாலையிலுள்ள உதவியாசிரியர்களின் நிலையைவிடச் சற்றுகடகீழ்ப்பட்டதாகவேயிருந்தது. யாழ்ப்பாணப் பிரதேசத்தில் காணப்பட்ட கோயிற்பற்றுப் பாடசாலைகளுள் கட்டைவேலி கோயிற்பற்று பாடசாலைகள் தனித்துவமானவையாகத் தொழிற்பட்டிருந்தன. இதேபோன்று புலோலி காரைநகர் கோயிற்பற்றுப் பாடசாலைகளும் ஒல்லாந்தர் கால கல்வி முகாமைத்துவத்தில் தனித்துவமான இடத்தைப் பெற்றிருந்தவை என்பதும் குறிப்பிடத்தக்கது. தம்பசிட்டி – புலொலி எல்லைக்கிராமங்களின் மத்தியில் மாயக்கையில் அமைந்திருந்த துலுக்கன் கோட்டை ஒல்லாந்தர் கால கல்வி மகாமைத்துவத்தின் ஒரு கேந்திர நிலையமாகத் தொழிற்பட்டிருந்தது என்பதை அங்கிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தொல்லியல் எச்சங்களால் அறிந்து கொள்ள முடிகின்றது.

**1.4.3 கொழும்பு கொமாண்டரியில் கல்வி:**

ஒல்லாந்தர் காலத்தில் கொழும்பு ஆணைப்புலத்திலுள்ள பாடசாலைகளின் தொகை ஆண்டுதோறும் ஒழுங்காக அதிகரித்துக் கொண்டு சென்றது. சிலகாலங்களில் மட்டும் அரசியல் சூழ்நிலை காரணமாக கல்விக்கு சில தடைகள் ஏற்பட்டன. மாணவர்களிடையே மட்டுமன்றி கற்பித்த ஆசிரியர்கள் இடையேயும், பாடசாலைகளுக்கிடையே காணப்பட்ட தரத்திற்கிடையேயும் வேறுபாடுகள் அதிகம் காணப்பட்டன. அவ்வாறு பாடசாலைகளிடையே தரவேறுபாடு காணப்பட்டமைக்கும் திறமையற்ற வகையில் கல்வித்தரம் காணப்பட்டமைக்கும் ஆசிரியர்களின் அசிரத்தையே காரணம் என ஸ்கொலார்ச்சென்னின் அறிக்கை தெரிவிக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்ட செமினரி தனது ஆரம்ப காலத்திற் பெருவெற்றியடைந்திருந்தமையால் அதே முறையில் கொழும்பு, காலி, மாத்தறை ஆகிய இடங்களிலும் செமினரிகளை நிறுவ ஆட்சிச்சபை முடிவு செய்தது. 1690 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24 ஆம் திகதியன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கமைய கொழும்பு செமினரி நிறுவப்பட்டது. ஆரம்பத்தில் வணக்கத்திற்குரிய சைமன் கட் என்பவர் அதன் முதல்வராகக் கடமையாற்றினர்.

**1.4.4 பாடவிதானம்:**



ISBN 978-955-627-128-1

- பாடவிதானம் தோற்றத்திலும் நோக்கத்திலும் மேனாட்டுக் கல்விமுறையையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. எனவே அது உள்ளூர் மக்களுக்கு ஏற்றதாக அமையவில்லை என்பது வெளிப்படை. எதிர்பார்க்கப்பட்ட உன்னதநிலையை அது அடையாததற்கு இதுவே முக்கிய காரணமாகும்.
- செமினரியில் போதிக்கப்பட்ட கல்விநெறி உயர்தரம், குறைந்த தரம் என இரு தரங்களாகப் பகுக்கப்பட்டிருந்தது.
- உயர்தரக்கல்வி ஒல்லாந்து மொழியில் போதிக்கப்பட்டதுடன் ஒல்லாந்த மொழியின் இலக்கணமும், எழுத்துப் பயிற்சியும், உள்ளூர் மொழியிலிருந்து ஒல்லாந்த மொழிக்கு மொழிபெயர்த்தெழுதும் முறையும் விசேட கவனம் பெற்றன.
- உயர்தரத்தின் மேல்வகுப்புக்களில் கிரேக்க மொழியும், எபிரேய மொழியும் கற்றுக்கொடுக்கப்பட்டன.
- கி.பி 1738ஆம் ஆண்டில் உயர்வகுப்பில் இலத்தீன் போதனை மொழியாக்கப்பட்டது.
- கிறீஸ்தவம், தருக்கவியல் என்பவற்றில் மாணவர்கள் பரீட்சிக்கப்பட்டனர்.
- உள்ளூர் மக்களுடன் வாதிட்டுப் புறச்சமய தத்துவங்கள் தவறானவை என்று நிரூபிப்பதற்கு மாணவர்களைப் பயிற்றுவிப்பதே போதனையின் இயல்பாகும்.

**1.4.5 காலி ஆணைப்புத்திலுள்ள கோவிற்பற்றுப் பாடசாலை:**

- இவ்வாணைப்புலத்திலுள்ள பாடசாலையை மேற்பார்வை செய்யும் பணியை பிரதேச பாடசாலைச்சபை செய்து வந்தது.
- வருடாந்த பரிசோதனைகள் நடைபெற்றமை.
- கோட்டைக்குள்ளிருந்த மாத்தறை உயர் பாடசாலை நாணயக்கார அல்லது அப்புஹாமிகளின் பாடசாலைகள் என வழங்கப்பட்டன. இது சிங்கள கனவான்களின் பிள்ளைகளுக்காக நிறுவப்பட்டது.
- இப்பாடசாலை தனது ஆரம்ப நிலையை வெகுவிரைவில் இழந்துவிட்டது.
- அப்புஹாமிகளின் பாடசாலை என வழங்கப்பட்ட போதிலும் உள்ளூர்க் கனவான்களின் பிள்ளைகள் அங்கு காணப்படவில்லை என்றும் தாழ்த்தப்பட்ட சமூகத்தினரின் பிள்ளைகளே பெரும்பாலும் கல்வி கற்றனர் என்றும் ஸ்கொலார்ச்சென் அறிக்கை கூறுகிறது. குறைந்த சாதிப் பிள்ளைகளுக்கென கோட்டைக்கு வெளியேயும் பாடசாலை ஒன்று இருந்தமை குறிப்பிடத்தக்கது.

**1.5 முடிவுகள்**

- போர்த்துக்கேயர் காலத்தை விட அமைதியான காலப்பகுதியாக இக்காலம் காணப்பட்டது.
- சிறந்த அமைப்பு ஒழுங்குமுறை பேணப்பட்டது.
- மதப்பணிகளுக்கு உள்நாட்டவர்களுக்கு வாய்ப்பளிக்கப்பட்டது
- கட்டாயம் கல்வி பெற வேண்டும். டச்சு சீர்திருத்த சபைக்கு சார்பான மதமாற்றத்தை உறுதிப்படுத்த இலவசக் கல்விச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.
- 15 வயது வரை கற்பது கட்டாயமாக இருந்தது. இதன் முடிவில் Larger dean என்ற விடுகைப்பத்திரம் வழங்கப்பட்டது. தொடர்ந்து 19 வயது வரை கற்றால் old larger dean விடுகைப்பத்திரமும் அதன் பின்பு இரு வருடங்கள் பகுதிநேரப் பாடசாலையில் கற்றகால் நேற Larger deen பத்திரமும் வழங்கப்பட்டது.
- கல்வியை அரச பொறுப்பாக்கியது ஒல்லாந்தரேயாவர். இதனால் அரசு கல்விக்கென தனியான பாடசாலைக்கல்வி ஆணைக்குழுவை நிறுவியது. இக்குழுவின் பணிகள்:
    1. ஆசிரியர் நியமனமும் கட்டுப்பாடும்
    2. பாடசாலை பரிசோதனை மதகுரு ஒருவரின் பொறுப்பில் இடம்பெற்றது.



ISBN 978-955-627-128-1

3. Larger dean பத்திரங்களை வழங்கல்
4. ஞானஸ்தானம் பெற விரும்புவர்களைப் பரீட்சித்தல்

- பாடசாலை ஒழுங்கமைப்பு: பங்குப் பாடசாலை, குருத்துவக் கல்லூரிகள், நியமப்பாடசாலை.
- ஒவ்வொரு மாகாணமும் பிரதேசம், கோட்டம், சிற்றூர் எனப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பங்குகள் தோறும் பாடசாலைகள் தொடங்கப்பட்டன.
- உள்ளூர் மக்களுக்கு எனவும் வெளிநாட்டவர்கள் கற்கவெனவும் தனித்தனியாகப் பாடசாலைகள் காணப்பட்டன.
- குருத்துத்துவக்கல்லூரிகளில் மேல்மட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பயின்றனர்.
- ஆசிரியர்கட்கு பயிற்சியளிக்கவென குருத்துவக் கல்லூரிகளுடன் இணைந்ததாக நியமப் பாடசாலைகள் செயற்பட்டன.

**உசாத்துணை:**

கிருஷ்ணராசா. செ, (1999), இலங்கை வரலாறு, வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

செல்வராசா. மா, (2007), ஒப்பியற்கல்வி, கௌரி வெளியீட்டகம், மட்டக்களப்பு.

சந்திரசேகரம். சோ, (2008), ஒப்பியல் கல்வி, குமரன் புத்தக இல்லம்.



ISBN 978-955-627-120-1